# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 19 திங்கட்கிழமை 04.08.2025 கதிர் 275



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel






## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு செம்மணிப் புதைகுழிப் பகுதிக்கு விஜயம்

### அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டது

யாழ்ப்பாணம், ஓக. 04

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான கலாநிதி கெஹான் தினுக் குணதிலக, பேராசிரியர் தையமுத்து தனராஜ், பேராசிரியர் பாத்திமா பர்சானா ஹனிபா மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.

7➤

# செம்மணிப் புதைகுழி சாட்சியங்களை பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுப்போம்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுதி




**கொழும்பு, ஓக. 04**

**செம்மணி மனித புதைகுழிகள் தொடர்பான சாட்சிகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கும் என்று அந்த ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

**செம்மணி மனிதப் புதைகுழிகளின் அகழ்வுப் பணிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் தலைமையிலான குழுவினர் இன்று நேரில் பார்வையிட்டனர்.**

**புதைகுழிகளைப் பார்வையிட்ட பின்னர் அவர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,**

“செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளை நேரில் பார்வையிட்டோம். அகழ்வுப் பணிகள் தொடர்பிலும் கேட்டறிந்தோம்.” - என்றனர்.

அதன்போது ஊடகவியலாளர் ஒருவர், ‘செம்மணிப் புதைகுழிகள் தொடர்பில் சாட்சியம் சொல்லத் தயார் என கிருஷாந்தி கொலை வழக்கில் குற்றவாளியாகச் சிறையில் இருக்கும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ என்பவர் கூறியுள்ளார். சிறையில் அவரது பாதுகாப்பு தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்குமா?’ எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு, “அவருக்குச் சிறையில் அச்சுறுத்தல் இருப்பதாக எமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றால் நிச்சயமாக அவரது பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுப்போம்.” - என்று அவர்கள் பதிலளித்தனர்

‘யாழ்ப்பாணத்தில் 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கையை

7➤

## பிரசன்ன ரணவீரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு



கொழும்பு, ஓக. 04

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதி வான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில்

7➤

## செம்மணியில் இன்று ஸ்கான் பரிசோதனை



யாழ்ப்பாணம், ஓக. 04

செம்மணிப் பகுதியில் தற்போது அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் இரண்டு மனிதப் புதைகுழிகளுக்கு மேலதிகமாக வேறு மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றனவா என்பதனைக் கண்டறியும் நோக்குடன் ஸ்கான் பரிசோதனை இன்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

7➤

## மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண்ணொருவர் படுகாயம்!



கிளிநொச்சி, ஓக. 05

கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தர்மபுரம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இன்று திங்கட்கிழமை இரண்டு மோட்டார்

7➤

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் செம்மணியில் சி.ஐ.டி.யிடம் வாக்குமூலம்



காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் தற்போது கையாளப்பட்டுவரும் நிலையிலேயே இந்த வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. செம்மணியில் வைத்தே வாக்குமூலம் பெறும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

# அரச அதிகாரிகளுக்கு முக்கிய அறிவிப்பு




கொழும்பு, ஓக 04

ஆகஸ்ட் 31க்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புகளைச் சமர்ப்பிக்கத்தவறும் எந்தவொரு அரச அதிகாரிகளுக்கும் எதிராகசட்ட நடவடிக்கைஎடுக்கப்படும் என்று இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் (CIABOC) தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம்ஆண்டு9ஆம்எண் ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 90இன் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊஐயுடீழுஊ கூறுகிறது.

மார்ச் 31 திகதியிட்ட தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புகளைச் சமர்ப்பிக்க வேண்டிய அதிகாரிகள் ஜூன் 30ஆம் திகதிக்குள் அவற்றை இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்திக்கு அனுப்புவதற்காக அந்தந்த நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிக்கையில் குறிப்பிடுகிறது.

கூடுதலாக, ஜூன் 30 முதல் ஆகஸ்ட் 31, 2025 வரை தாமதமாக சமர்ப்பிக்கப்படும் அறிவிப்புகளுக்கு சட்டத்தின் விதிகளின்படி அபராதம் விதிக்கப்படும் என்று ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த அறிவிப்புகளை இன்னும் சமர்ப்பிக்காத எந்தவொரு நிர்வாக தர அரசு அதிகாரிகளும், விதிக்கப்படக்கூடிய எந்தவொரு நிர்வாக அபராதங்களையும் குறைக்க விரைவில் அவ்வாறு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள் என்று இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் மேலும் கூறியுள்ளது.

ஜூன் 30க்குப் பிறகும் சமர்ப்பிக்கப்படும் அறிவிப்புகளை நிறுவனத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், எந்தவொரு அதிகாரப்பூர்வ அறிவிப்பும் ஒரு நிறுவனத் தலைவரால் நிராகரிக்கப்பட்டால், அந்த விஷயத்தை உடனடியாக ஆணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் CIABOC வலியுறுத்தியுள்ளது. (ஐ)



# யானைகள் அட்டகாசம் நுழைவாயில் சுற்றுமதில் சேதம்

கொழும்பு, ஓக 04

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயத்தில் காட்டு யானைகள் உட்புகுந்து பாடசாலை நுழைவாயில் மற்றும் சுற்றுமதில் ஆகியவற்றை சேதப்படுத்தியுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.பி.ஜெமீல் தெரிவித்தார்.

ரிதிதென்ன குடியிருப்பு பகுதிக்குள் திங்கட்கிழமை அன்று அதிகாலை1 மணியளவில் உட்புகுந்த யானைகள் பாடசாலை நுழைவாயில் மற்றும் சுற்றுமதிலை உடைத்து சேதப்படுத்தியுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார். (ஐ)



# சுற்றுலாப் பயணிகளின் வருகையால் 3.7 பில்லியன் டொலர் வருமானம்

கொழும்பு, ஓக 04

கடந்த 6 மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மூலம் 3.7 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த வருட இறுதிக்குள் மற்றுமொரு வருமான இலக்கு 3.7 பில்லியன் டொலரை எட்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

நுவரெலியா சீதை அம்மன் கோயிலில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் விஜித ஹேரத் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளில் இந்தியர்கள்தான் அதிக அளவில் உள்ளனர். பலர் மத ரீதியாக சுற்றுலா நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

கோனேஷ்வரம் ஆலயம், கதிர்காமம் போன்ற பல்வேறு இடங்களைக் காண ஏராளமான இந்திய சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அது எங்களுக்கு மிகப்பெரிய பலம்.

சீதையம்மன் ஆலயத்தின் அபிவிருத்தி பணிகளுக்கு எமது அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றது.

நாம் பொருளாதாரத்தில் வங்குரோத்து நிலையை அடைந்திருந்தோம் என்பது உங்களுக்கு தெரியும். இந்த நிலையிலிருந்து வெளியேற, சுற்றுலாத் துறையை விரைவாக மேம்படுத்த வேண்டும். என்றார். (ஐ)

# முன்னாள் ஜனாதிபதி ரணிலின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு சி.ஐ.டி. அழைப்பு



கொழும்பு, ஓக. 04

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க குற்றப் புலனாய்வுப் திணைக்களத்துக்கு நாளை செவ்வாய்க்கிழமை அழைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளரான சமன் ஏக்கநாயக்க குற்றப் புலனாய்வுப் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட செயலாளரான சாண்ட்ரா பெரேரா குற்றப் புலனாய்வுப் திணைக்களத்துக்கு இன்று திங்கட்கிழமை அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய மீன்பிடி படகுகள் கணக்கெடுப்பு ஆரம்பம்


10 வருடங்களுக்குப் பிறகு தேசிய மீன்பிடிப் படகு கணக்கெடுப்பு இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதன் முதல் கட்டம் இன்று பாணந்துறை மீன்பிடி துறைமுகத்தில் ஆரம்பமாகி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியாக செயல்படுத்தப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் கடற்கரையோரத்தில் இயங்கும் சுமார் 50,000 மீன்பிடி படகுகளில் புதுப்பிக்கப்பட்ட தரவுத்தளத்தை உருவாக்குவதே இந்தக் கணக்கெடுப்பின் பிரதான நோக்கமாகும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் மூலம், தொழிலில் தீவிரமாக ஈடுபடும் படகுகளை அடையாளம் காண்பது, பாவனையில் இல்லாத மற்றும் பழுதடைந்த படகுகளை கரையோரத்திலிருந்து அகற்றி "Clean Sri Lanka" திட்டத்திற்கு ஆதரவளிப்பது, சுற்றுலாத்துறையின் மேம்பாட்டிற்குப் பங்களிப்பது மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கான உரிமங்களை ஒழுங்குபடுத்துவது போன்றவை எதிர்பார்க்கப்படுகின்றன. (ஐ)

# நாட்டிலுள்ள 18 வயதிற்குட்பட்டோருக்கு சுற்றுலா தளங்களுக்குச் செல்ல இலவச நுழைவு!



கொழும்பு, ஓக 04

நாட்டிலுள்ள 18 வயதிற்குட்பட்டோருக்கு பாரம்பரிய தளங்களுக்கு டிக்கெட் இல்லாத இலவச நுழைவுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் 18 வயதிற்குட்பட்ட வெளிநாட்டு குழந்தைகளுக்கு வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் நுழைவுச் சீட்டுகளை வழங்கவும் அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய கலாச்சார நிதியத்தின்படி, இந்தத் திட்டம் ஜுலை 01 ஆம் திகதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முடிவின் முதன்மை நோக்கம் உள்ளூர் குழந்தைகளிடையே கலாச்சார பாரம்பரியத்தின் மீதான பாராட்டை ஏற்படுத்துவதும், தேசிய பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் தளங்கள் குறித்த விழிப்புணர்வை வளர்ப்பதும் ஆகும்.

நியாயமான மற்றும் பொருத்தமான நடைமுறைகளின் கீழ் வெளிநாட்டு குழந்தைகளுக்கும் அணுகல் வழங்கப்படும் என்று மத்திய கலாச்சார நிதியம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகள் தேசிய பாரம்பரிய தளங்களைப் பார்வையிடும்போது குழந்தைகளுக்கு பொருத்தமான வாய்ப்புகள் மற்றும் மதிப்புமிக்க கல்வி அனுபவங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

குறிப்பாக, உள்ளூர் குழந்தைகளுக்கு வயது அடிப்படையில் இலவச அணுகலை வழங்குவது அவர்களின் தேசிய பாரம்பரியத்தில் உண்மையான புரிதலையும் ஆர்வத்தையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று மத்திய கலாச்சார நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# கொழும்பில் விடுதி சுற்றிவளைப்பு பெண்கள் மற்றும் ஆண்கள் கைது

கொழும்பு, ஓக 04

கொழும்பின் புறநகர் பகுதியான மாதிவெல பகுதியில் தகாத செயற்பாடுகளுடன் முன்னெடுக்கப்பட்ட நிலையம் ஒன்று பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

மிரிஹான பொலிஸார் நேற்று இரவு மேற்கொண்ட சோதனையில், விடுதியின் மேலாளர், 2 பெண்கள் மற்றும் 2 ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் 22 மற்றும் 24 வயதுடையவர்கள், அவர்கள் பதுளை மற்றும் புடலுஓயா பகுதிகளை சேர்ந்தவர்களாகும்.

சந்தேக நபர்களான ஆண்கள் 22, 25 மற்றும் 33 வயதுடைய திக்வெல்ல மற்றும் பன்னிப்பிட்டிய பகுதியை சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மிரிஹான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பெலவத்தை சீனி தொழிற்சாலையை விற்பனை செய்ய முயற்சி



கொழும்பு, ஓக *04*

பெலவத்தை சீனித் தொழிற்சாலையை விற்பனை செய்வதற்கு அசராங்கம் முயற்சிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் ததலைவர் விமல் வீரவன்ச இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

பாதிப்புக்கு உள்ளாக்கி, அதில் பிரச்சினைகளை உருவாக்கி, இறுதியில் அந்த ஆலையை விற்பனை செய்ய தயாராகி வருவதாக தெரிவித்தள்ளார்.

பெலவத்தை சீனத் தொழிற்சாலையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

முன்னர் வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையை மீட்டெடுக்க முடிந்ததற்கு காரணம், ஆலைகளை மீட்கக்கூடிய திறமையான தலைவர்களை நியமித்ததே என்று விமல் வீரவன்ச இதன்போது சுட்டிக்காட்டினார்.

அன்று அனுர குமார திஸாநாயக்க கேசினோ தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் மற்றும் அவர் 'சிட்டி ஆஃப் ட்ரீம்ஸ்' கேசினோவுடன் கூடிய ஹோட்டலை திறப்பதற்கு செல்வது குறித்தும் விமல் வீரவன்ச இதன்போது கருத்து தெரிவித்தார்.


அதேபோல், இலங்கையில் டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்கும் பணியை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு ஒப்படைக்க அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சி குறித்தும் விமல் வீரவன்ச இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பல உண்மைகளை அம்பலப்படுத்தினார். (ஐ)

# குரங்குகளின் தொல்லையால் அவதிப்படும் தோப்பூர் மக்கள்

திருகோணமலை, ஓக 04

திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் பிரதேசத்தில் குரங்குகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குரங்குகள் வீடுகளுக்குள் புகுந்து உணவுகளை உட்கொள்வதோடு வீட்டு உபகரணங்களுக்கும் சேதம் விளைவித்து வருகின்றன.



அத்தோடு வீட்டு காணிகளில் உள்ள பயன்தரும் மரங்களில் காணப்படும் பழங்களை சாப்பிட்டு செல்வதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் வீடுகளில் சிறு பிள்ளைகளை வைத்திருப்பது கூட அச்சமாக உள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே குரங்குகளின் தொல்லையை கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென தோப்பூர் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ)

# டெல்லியில் நடந்த செயின் பறிப்பு தொடர்பாக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு மயிலாடுதுறை எம்பி. சுதா கடிதம்



டெல்லியில் நடந்த செயின் பறிப்பு தொடர்பாக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு மயிலாடுதுறை எம்பி. சுதா கடிதம் அனுப்பியுள்ளார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மயிலாடுதுறை எம்.பி. சுதா. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21ம் தேதி முதல் நடைபெற்று வரும் நிலையில், தற்போது இவர் டெல்லியில் உள்ளார். இந்நிலையில், இன்று நாடாளுமன்ற குடியிருப்பு அருகே சுதா நடைபயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அப்போது அப்பகுதி வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர், சுதா அணிந்திருந்த 4.5 சவரன் தங்க செயினை பறித்துக் கொண்டு தப்பியோடினர். இதில் சுதாவுக்கு லேசான காயம் ஏற்பட்டது. இதுதொடர்பாக சாணக்கியபுரி காவல் நிலையத்தில் காங்கிரஸ் எம்.பி. சுதா புகார் அளித்தார். இந்த புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்துள்ள போலீசார், செயின் பறிப்பில் ஈடுபட்ட மர்ம நபர்களை வலை வீசி தேடி வருகின்றனர்.

இந்நிலையில், டெல்லியில் தூதரகங்கள், மாநில அரசின் இல்லங்கள் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு நிறைந்த சாணக்யாபுரி பகுதியில் நடைபயிற்சியின் போது செயின் பறிப்பில் ஈடுபட்ட நபர்களை விரைந்து கைது செய்யுமாறு காங்., எம்.பி. சுதா, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு மின்னஞ்சல் வாயிலாக கடிதம் அனுப்பியுள்ளார். அதில், செயின் பறிப்பில் ஈடுபட்ட நபரை விரைவாக கண்டுபிடித்து கைது செய்ய வேண்டும்.

ஹெல்மெட் அணிந்து வந்த மர்ம நபர் தங்கச் சங்கிலியை பறித்து சென்ற போது தன்னுடைய கழுத்தில் காயம் ஏற்பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு மண்டலத்தில் உள்ள சிசிடிவி கேமராக்கள் மூலம் மர்ம நபரை பிடிக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும். மேலும் எனது தங்கச் சங்கிலி மீட்கப்பட்டு, எனக்கு விரைவில் நீதி கிடைக்க உறுதியளிக்கவும் எனவும் அந்த கடிதத்தில் சுதா குறிப்பிட்டுள்ளார். தற்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் நகை பறிக்கபட்டுள்ளது பெரும் பேசுபொருளாக உள்ளது. (ஐ)

## வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின்வாகன உற்பத்தி ஆலையை தொடங்கி வைத்தார் முதலமைச்சர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று (4.8.2025) தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் சிலாநத்தம் தொழிற்பூங்காவில் வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின் வாகன உற்பத்தி ஆலையை தொடங்கி வைத்தார். 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் முன்னிலையில் 16,000 கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட முதலீடு மற்றும் 3500 நபர்களுக்கு உறுதி செய்யப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பதினெட்டு மாதங்களுக்குள் முதற்கட்டமாக, 1300 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின்வாகன உற்பத்தி ஆலையை தொடங்கி வைத்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்துவதற்கும் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி என்ற தமிழ்நாடு அரசின் கொள்கைக்கேற்ப ஈர்க்கப்படும் தொழில் திட்டங்கள் மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கப்பட்டு, இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்த்திட 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், வின்ஃபாஸ்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட அடுத்த மாதத்திலேயே, அதாவது பிப்ரவரி 2024 மாதம், தமிழ்நாடு முதலமைச்சர் இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். ஆலைக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்ட 18 மாதங்களில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் இத்திட்டத்தின் முதற்கட்ட உற்பத்தி தொடங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இது புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு துரிதமாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பல துறைகளில் சிறந்து விளங்கும் வியட்நாம் நாட்டைச் சேர்ந்த வின் குழுமத்தின் ஒரு அங்கமான வின்ஃபாஸ்ட் நிறுவனம், தனது புதிய அதிநவீன மின் வாகன உற்பத்தி ஆலையை, தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் சிலாநத்தம் தொழிற் பூங்காவில் அமைத்துள்ளது. வின்ஃபாஸ்ட் நிறுவனம், இந்த ஆலையில், ஆண்டுக்கு 50,000 கார்கள் உற்பத்தி செய்யும் அளவிற்கான தொழிற்சாலையை நிறுவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்களின் உற்பத்தி தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் மட்டும் இருந்து வரும் நிலையில், முதல் முறையாக தென் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த பெரும் தொழில் திட்டம் இப்பகுதியின் அடுத்தகட்ட தொழில் வளர்ச்சிக்கும் இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கும் வழி வகுக்கும்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சமூகநலம் -மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி. கீதாஜீவன், மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ஃபாம் சான் சவ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி. மார்க்கண்டையன், எஸ்.அமிர்தராஜ், சி.சண்முகய்யா, காதர்பாட்சா முத்துராமலிங்கம், அப்துல் வகாப், மருத்துவர் நா.எழிலன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் க. இளம்பகவத், வின்ஃபாஸ்ட் இந்தியா நிறுவனத்தின் திட்ட இயக்குநர் பிரகலாதன் திரிபாதி, அந்நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

## உத்தர பிரதேசம், ஹிமாச்சலை புரட்டிப் போட்ட கனமழை:

# வீடுகளைச் சூழ்ந்த வெள்ளம்- படகுகள் மூலம் மீட்கப்படும் மக்கள்



தொடர் கனமழையால் ஹிமாச்சல், உத்தரபிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்கள் வெள்ளத்தில் தத்தளித்து வருகின்றன. உத்தர பிரதேசம் மாநிலம் வாரணாசியில் தொடர் கனமழையால் கங்கையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆற்றங்கரையோரம் இருந்து சிறிய கோயில்கள் நீரில் மூழ்கின. பிரயாக்ராஜ் நகரில் விடுகளுக்குள் வெள்ளம் சூழ்ந்ததால் மக்களின் இயல்பு வாழ்கை முடங்கியது. மக்கள் தங்களது வீடுகளில் இருந்து கேன்கள் மூலம் தண்ணீரை வரி இரைத்து வெளியேற்றினர்.

இதே போன்று பிரயாக்ராஜின் கரேலி பகுதியில் படகுகள் மூலம் மக்களை மீட்கும் பணியில் தன்னார்வலர்கள் ஈடுபட்டுள்ளனர். ஹிமாச்சல பிரதேசம் மாநிலத்தில் தொடரும் கனமழையால் மண்டி - கொள்ளு தேசிய நெடுஞ்சாலையில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதனால் போக்குவரத்து முற்றிலுமாக துண்டிக்கப்பட்டது. பெருவெள்ளத்தால் உருக்குலைந்த மண்டி பகுதியில் ஹிமாச்சல ஆளுநர் ஷிவ் பிரதாப் சுக்லா நேரில் ஆய்வு செய்தார். ஹிமாச்சல் மாநிலத்தில் கனமழை வெள்ளப்பெருக்கால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 170ஐ கடந்துள்ளது. (ஐ)

## இந்திய ராணுவம் பற்றி அவதூறாக பேசியதாக ராகுல்காந்தி மீது தொடர்ந்த வழக்கு விசாரணைக்குத் தடை



இந்திய ராணுவம் பற்றி அவதூறாக பேசியதாக ராகுல்காந்தி மீது தொடர்ந்த வழக்கு விசாரணைக்குத் தடை

இந்திய ராணுவம் பற்றி அவதூறாக பேசியதாக ராகுல்காந்தி மீது தொடர்ந்த வழக்கு விசாரணைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. லக்னோ நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணைக்கு தடை விதித்தது உச்சநீதிமன்றம். வழக்கை ரத்து செய்யக்கோரி ராகுல் தாக்கல் செய்த மனு அலகாபாத் கோர்ட்டில் நிராகரிக்கப்பட்டது. அலகாபாத் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து ராகுல் காந்தி தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் இன்று விசாரித்தது. (ஐ)

# பெண்களுக்கு தொழில்நுட்பம் தெரியாது?



-நாராயணி சுப்ரமணியன்

"இதையெல்லாம் செய்ய உங்களுக்குக் கடினமாக இருக்கும். இதற்கு வலு தேவை. நீங்கள் எதற்கு சிரமப்படுகிறீர்கள்? நானே பார்த்துக்கொள்கிறேன்."

இந்தியாவில் எலும்புமூட்டு அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்று, முதுகலை மருத்துவத்தில் தங்கப்பதக்கம் பெற்றவர். தனித்திறமையால் வெளிநாட்டில் ஒரு பட்டயப்படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு உள்ள அனுபவமிக்க மருத்துவர்களிடமும் சக பணியாளர்களிடமும் நல்ல மதிப்பைப் பெற்ற பெண் மருத்துவர் அவர். பட்டயப்படிப்பு முடிந்த பின்னர், புதிதாக வந்து சேர்ந்த ஓர் ஆண் மருத்துவரிடம் தனது கண்காணிப்பில் உள்ள நோயாளிகளுக்கு என்னென்ன வேண்டும் என்று பயிற்சி கொடுக்கும்போது அவர் எதிர்கொண்ட சொற்கள் இவை. அத்தனை மாதங்களாக அந்த நோயாளிகளின் எலும்புகளை இறுக்கிப் பிடித்து கட்டுப்போட்டது இந்தப் பெண் மருத்துவர்தான். ஆனால் இவரால் இப்படிப்பட்ட கடுமையான வேலைகளைச் செய்ய முடியாது என்று புதிய மருத்துவர் நமுட்டுச் சிரிப்புடன் அறிவிக்கிறார். தனக்கான மருத்துவத்துறையைத் தேர்ந்தெடுத்ததிலிருந்தே, "பெண்ணான நீங்கள் எதற்கு இந்தப் படிப்புக்கெல்லாம் வருகிறீர்கள்? எளிமையான படிப்பை நோக்கிச் செல்லலாமே" என்பது போன்ற விமர்சனங்களைக் கேட்டிருந்தாலும் இந்தச் சொற்கள் கொஞ்சம் எரிச்சலூட்டிவிட்டன என்று அந்தப் பெண் மருத்துவர் என்னிடம் பகிர்ந்துகொண்டார்.

"விருது பெறுபவர்கள் வெறும் ஆண்களாகவே இருந்துவிட்டால் யாராவது வந்து கொடி தூக்குவார்கள், அதனால் சும்மா பேருக்கு ஒரு பெண்ணையும் விருதுப் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள்."

"இது உங்களுக்குப் புரிவதற்குக் கொஞ்சம் கடினமாக இருக்கலாம், கொஞ்சம் ஆழமான அறிவியல்"

"பரவாயில்லையே பெண்ணாக இருந்துகொண்டு இவ்வளவு சிறப்பாகச் செயற்படுகிறீர்களே?"

"எல்லாருக்கும் தேநீர் கொண்டுவர முடியுமா?"

"நீங்கள் ரிசப்ஷனிஸ்ட் என்று நினைத்தேன், விஞ்ஞானி என்று தெரியவில்லை, மன்னித்துக்கொள்ளுங்கள்."

"நீங்கள் ஏன் எப்போதும் முகத்தைக் கடுகடுவென்று வைத்திருக்கிறீர்கள்? கொஞ்சம் சிரித்துதான் பேசுங்களேன்."

"பெண்களுக்கு இந்தத் துறையெல்லாம் ஒத்துவருமா?"

"பெண் என்பதால் சோஃப்ட் கார்னரில் பதவி உயர்வு தந்திருப்பார்கள்."

"பெண்களைக் களப்பணிக்கு அழைத்துச் சென்றால் அவர்களை நாம் பார்த்துக்கொள்ள வேண்டிவரும். இதெல்லாம் வேண்டாத வேலை."

"பெண்களை வேலைக்கு எடுத்தாலே இப்படித்தான், தொட்டதற்கெல்லாம் அழுவார்கள்."

"வேலையை விட்டுவிட்டு எப்படியும் கல்யாணம் செய்துகொண்டு போய்விடுவீர்கள்."

"இது அதிக நேரம் எடுக்கும் வேலையாயிற்றே, உங்கள் கணவர் அனுமதிக்கிறாரா?"

"பெண் என்பதால் வேலை தந்திருக்கிறார்கள்."

"ஏன் தொட்டதெற்கெல்லாம் எரிச்சல்படுகிறீர்கள்? ஓ! மாதத்தின் அந்தக் காலகட்டமா?"

"பெண்களுக்கு அவ்வளவாகக் கணக்கு புரியாது."

இவை மிகச் சில உதாரணங்கள் மட்டுமே. ஒவ்வொரு நாளும் பணியிடத்தில் பெண்களிடம் காட்டப்படும் பாரபட்சத்தையும் அவர்கள் சந்திக்கும் கிண்டல் கேலிகளையும் பட்டியலிட்டால் அது நீண்டுகொண்டே போகும். இவையெல்லாம் சும்மா கற்பனைக்கூற்றுகள் அல்ல. ஸ்டெம் பெண்கள் பலரும் என்னிடம் தனிப்பட்ட முறையில் பகிர்ந்துகொண்ட உண்மை அனுபவங்களின் அடிப்படையில்தான் மேலே இருக்கும் எல்லாவற்றையும் எழுதியிருக்கிறேன். இந்தக் காலகட்டத்திலும் இப்படியெல்லாமா நடக்கும் என்று யோசனை வரலாம். இப்போதும் இதெல்லாம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. உங்களுக்குத் தெரிந்த ஸ்டெம் பெண்களிடம் பேசிப் பாருங்கள், உண்மை நிலவரம் புரியும்.

இன்றைய காலகட்டத்திலும்கூட மெடில்டா விளைவு தொடர்கிறது என்கிறார்கள் வல்லுநர்கள். விருது மற்றும் அங்கீகாரத்தில் பெண்களின் சாதனைகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பது, ஆய்வு முடிவுகளைப் பிரசுரிப்பதில் உள்ள பாரபட்சம், உயர் பதவிகளில் ஸ்டெம் பெண்கள் அமர்வதில் உள்ள தடைகள், நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம், பணியிடத்தில் பால்வேற்றுமை காட்டப்படுவது, குடும்பத்தையும் வேலையையும் ஒருங்கே நிர்வகிப்பதில் சமகாலப் பெண்கள் சந்திக்கும் சிக்கல்கள் எனப் பல விதங்களில் சமகால மெடில்டா விளைவு வெளிப்படுகிறது.

ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம். ஹப்பிள் தொலைநோக்கியை நாம் அனைவரும் அறிவோம். விண்வெளியில் செலுத்தப்பட்டிருக்கும் இந்தத் தொலைநோக்கி மூன்று தசாப்தங்களாக பூமியைச் சுற்றிவருகிறது. பிரபஞ்சம் விரிவடைவது, தூரத்து நட்சத்திரக் கூட்டங்கள், வெளிக்கோள்களின் வளிமண்டலம், நட்சத்திரங்களின் உருவாக்கம் மற்றும் பரிணாமம், நெபுலாக்கள், சூப்பர்நோவாக்கள் என்று பல்வேறு விண்வெளி அற்புதங்களைப் பற்றி அறிந்துகொள்ள உதவியாக இருந்துகொண்டிருக்கிறது. நன்றாக வேலை செய்யும் கருவி என்றால் சிறிய பல்கலைக்கழகத்துக்குள்ளேயே அதைப் பயன்படுத்த போட்டா போட்டி நடக்கும். உலகத்துக்கான முக்கியமான தொலைநோக்கியாயிற்றே! சும்மாவா? தொலைநோக்கியைப் பயன்படுத்த வேண்டுமானால் செய்யப்போகும் ஆய்வு பற்றிய விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். நடுவர் குழுவினரின் தீவிரமான அலசலுக்குப் பிறகு, தொலைநோக்கியை யார் பயன்படுத்தலாம், எவ்வளவு நேரம் பயன்படுத்தலாம் என்கிற பட்டியல் வெளியிடப்படும்.

2001ஆம் ஆண்டு முதல் 2012 வரையிலான காலகட்டத்தில், ஹப்பிள் தொலைநோக்கிக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களையும் அவற்றின் தேர்வு விகிதத்தையும் ஆராய்ந்தார் நீல் ரீட் என்கிற அறிவியலாளர். ஆண்கள் சமர்பிக்கும் விண்ணப்பம் தேர்வு செய்யப்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது என்பதைக் கண்டறிந்தார். இதை உலகின் கவனத்துக்குக் கொண்டு சென்றார். இன்னொரு ஆய்வில், விண்ணப்பங்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்பதை அலசினார்கள். எழுத்துரீதியாக எதுவும் ஆவணப்படுத்தப்படுவதில்லை என்றும், விவாதங்களின்போது பெண் விஞ்ஞானிகளின் தகுதி குறைத்து மதிப்பிடப்படுகிறது எண்றும் அவர்கள் கண்டறிந்தார்கள்.

எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்ட நாசா, ஆய்வுக்குழுவினரின் தனிப்பட்ட தகவல்களைத் தெரிவிக்காமல் விண்ணப்பத்தை மட்டும் வைத்து தேர்வு நடத்தும் முறையை வடிவமைத்தது. இந்தப் புதிய செயல்முறை 2018இல் அமலுக்கு வந்தது. புதிய நடைமுறை வந்த மூன்றே ஆண்டுகளில் பெண் விஞ்ஞானிகளுக்கு எதிரான பாரபட்சம் குறைந்தது. இதையும் தரவுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. நாசாவின் வழிமுறை வெற்றியடைந்ததைத் தொடர்ந்து ஐரோப்பா, ஆஸ்திரேலியா போன்ற பிற பகுதிகளில் உள்ள பெரிய ஆய்வகங்களும் இதே நடைமுறையைப் பின்பற்றப்போவதாக அறிவித்திருக்கின்றன.

இந்த உதாரணத்தில் நாம் பல விஷயங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவதாக, "கருவியைப் பயன்படுத்துவதற்கான நேர ஒதுக்கீடு" என்று மட்டும் இதைப் பார்க்க முடியாது. கருவியைப் பயன்படுத்தினால்தான் தரவுகள் கிடைக்கும், அதை வைத்து ஆய்வுக்கட்டுரைகள் எழுதிப் பிரசுரிக்கலாம், ஆய்வுக்களத்தில் மதிப்பு உயரும், அடுத்தடுத்து ஆய்வுகள் நடத்துவதற்கு ஊக்கமும் நிதி உதவியும் கிடைக்கும். அது மட்டுமல்ல, ஹப்பிள் தொலைநோக்கியைப் பயன்படுத்தியிருக்கிறார் என்பதே ஒரு விஞ்ஞானியின் வாழ்வில் மைல்கல்தானே! ஆக, எந்த வகையில் பார்த்தாலும் ஒருவரது துறைசார்ந்த பயணத்தில் இது ஒரு முக்கியப் படியாக இருக்கும். இங்கேயே பெண்களுக்குப் பாரபட்சம் வந்துவிட்டால் அவர்கள் எப்படி முன்னேறுவார்கள்?

இரண்டாவதாக, இது 12 ஆண்டுகளாக நடந்துகொண்டிருந்த விஷயம். வேறு ஒருவர் தானாக முன்வந்து ஆய்வு செய்து இந்தப் பாரபட்சத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார். அப்போதும் அந்தத் தவறு சரிசெய்யப்பட ஆறு ஆண்டுகள் தேவைப்பட்டன. மாற்றம் வந்துவிட்டது என்பதை நினைத்து மகிழ்வதோடு இந்தப் பாதை எவ்வளவு கடினமானதாக இருந்திருக்கிறது என்பதையும் யோசிக்க வேண்டும்.

மூன்றாவது, நாசாவைப் பார்த்துப் பெரிய அமைப்புகள் மாறிவிட்டன. ஆனால், சிறிய அமைப்புகள் என்ன செய்யும்? நேரடியாக முகம் பார்த்துதான் அனுமதி கேட்க வேண்டும் என்பது போன்ற சூழ்நிலையில் இருக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் என்ன செய்வார்கள்? அதற்கு என்ன மாற்றுவழி இருக்கிறது? இவையெல்லாம் அடுத்தகட்ட கேள்விகளாக எழுகின்றன.

ஓர் உதாரணத்தை விளக்கமாகப் பார்த்துவிட்டோம். இன்னும் என்னென்ன வழிகளில் ஸ்டெம் பெண்கள்மீது பாரபட்சம் காட்டப்படுகிறது?

பெண்கள் எழுதும் ஆய்வுக்கட்டுரைகள் ஒப்பீட்டளவில் குறைவான மேற்கோள்கள் (ஊவையவழைளெ) பெறுகின்றன.

பெண்கள் எழுதும் ஆய்வுக்கட்டுரைகளைத் தேர்வு செய்து பிரசுரிக்க, ஆய்விதழ்கள் இரண்டு மடங்கு கூடுதல் நேரம் எடுத்துக்கொள்கின்றன.

ஆய்விதழ்களின் ஆசிரியர் குழுவில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக இருக்கிறது.

ஆய்வுக்கட்டுரைகளைச் சரிபார்க்கும் சுநஎநைறநச பதவிகளில் போதுமான பெண்கள் இல்லை.

இயற்பியல் மற்றும் அது சார்ந்த துறைகளில் பெண் விஞ்ஞானிகள் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தால் அது எதிர்மறையான விமர்சனங்களையே சந்திக்கிறது.

பெண்களுக்கு ஸ்டெம் துறைகளில் உயர் பதவிகள் வழங்குவதில் பாரபட்சம் இருக்கிறது. இது ஒரு பெரிய சிக்கலை உருவாக்குகிறது. ஆய்வுக்குழுவில் அவர்கள் சிறப்பாகப் பங்கேற்றால்கூட படிநிலை அடிப்படையில் ஆசிரியர்களின் பெயர்கள் வரும் சூழலில் பெண்களின் பெயர் முதல் இடத்தில் இருப்பதில்லை.

ஆய்வுக்கான நிதி ஒதுக்கீடு மானியங்கள் (சுநளநயசஉா பசயவெள) ஆண்களுக்கே அதிகமாகக் கிடைக்கின்றன.

சராசரியாகப் பெண் விஞ்ஞானிகளுக்குக் கிடைக்கும் மானியத் தொகையும் ஆண்களுக்குக் கிடைக்கும் தொகையைவிட இரண்டு மடங்கு குறைவு.

சரியாக கவனித்தால் இது ஒரு மீளா சுழற்சி என்பது புரிய வரும். உயர்பதவிக்குப் போக வேண்டும் என்றாலோ நிதி மானியங்கள் பெற வேண்டும் என்றாலோ போதுமான ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட வேண்டும், ஆனால் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடுவதில் பாரபட்சம் இருக்கிறது. இதனால் பெண்களுக்குப் பதவி உயர்வும் நிதி ஒதுக்கீடும் கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. நிதியும் பதவியும் இல்லாவிட்டால் எப்படி ஆய்வுக்கட்டுரை எழுதி முதல் ஆசிரியராகத் தன் பெயரைப் போட்டு பதிப்பிக்க முடியும்? இரண்டாவது படியில் ஏறினால்தான் முதல் படியில் ஏறமுடியும் என்பதுபோன்ற சிக்கல் இது. இதில் மாட்டிக்கொண்டவர்கள் கிணற்றுக்குள்ளேயே வண்டி ஓட்ட வேண்டியதுதான்.

இதைவிட பெரிய பாரபட்சம் ஒன்று இருக்கிறது. பெரிய அளவிலான ஆய்வு மாநாடுகளில் குழு விவாதம் மற்றும் முக்கியக் கருத்துரை ஆகிய நிகழ்வுகளை நடத்தும்போது, (7ஆம் பக்கம் பார்க்க..)

# 3 ஆண்டுகளை கடந்து நீடிக்கும் போர் ரஷ்ய எண்ணெய் கிடங்கு மீது உக்ரைன் டிரோன் தாக்குதல்

உக்ரைன் ரஷ்யா போர் மூன்றாண்டுகளை கடந்தும் முடிவின்றி நீடிக்கிறது. இந்த போரில் அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு உதவி வருவதால் ரஷ்யாவை உக்ரைன் எதிர்த்து வருகிறது. உக்ரைனுக்கு உதவி வந்தாலும் போர் நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமெரிக்க அதிபர் டிரம்ப் இருநாடுகளையும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இந்நிலையில் ரஷ்யாவில் உள்ள ஒரு எண்ணெய் கிடங்கு மீது உக்ரைன் டிரோன்களை ஏவி தாக்குதல் நடத்தி உள்ளது. ரஷ்யாவின் கருங்கடல் ரிசார்ட்டான சோச்சி அருகே உள்ள எண்ணெய் கிடங்கு மீது உக்ரைன் ராணுவம் நேற்று முன்தினம் இரவு முதல் தொடர்ச்சியாக டிரோன்களை ஏவி தாக்குதல் நடத்தி உள்ளது. இதனால் எண்ணெய் கிடங்கு முழுவதும் தீப்பற்றி வானுயர கொழுந்து விட்டு எரிந்தது. சம்பவ இடத்துக்கு வந்த 120க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் நீண்டநேர போராட்டத்துக்கு பிறகு தீயை அணைத்தனர்.

இதேபோல் ரஷ்யாவின் வடக்கே வோரோனேஜ் பகுதியில் குடியிருப்புகள் மீது உக்ரைன் நடத்திய டிரோன் தாக்குதலில் 4 பேர் காயமடைந்தனர். ரஷ்யாவின் கருங்கடல் பகுதியில் நேற்று அதிகாலை வரை உக்ரைனின் 93 டிரோன்களை ரஷ்ய வான்பாதுகாப்பு படைகள் சுட்டு வீழ்த்தியதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தெற்கு உக்ரைனின் மைக்கோலைவ் நகரில் உள்ள குடியிருப்பு பகுதிகள் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 7 பேர் காயமடைந்ததாக உக்ரைன் ராணுவம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா 76 டிரோன்கள், 7 ஏவுகணைகளை ஏவி தாக்கியது. இதில் 60 டிரோன்கள் மற்றும் ஒரு ஏவுகணையை உக்ரைன் ராணுவம் இடைமறித்து அழித்து விட்டதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது. (ஐ)




## அமெரிக்காவின் 25% வரி விதிப்பால் ரஷ்யாவின் கச்சா எண்ணெய் வாங்காதது நல்ல நடவடிக்கை: இந்தியாவுக்கு டிரம்ப் பாராட்டு




இந்தியா இனி ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கப் போவதில்லை என்பதை கேள்விப்பட்டதாகவும், இது நல்ல நடவடிக்கை என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் பாராட்டி உள்ளார்.

அமெரிக்க பொருட்களுக்கு அதிக வரி விதிப்பதால், இந்திய இறக்குமதி பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிப்பதாகவும், ரஷ்யாவிடமிருந்து அதிகளவு கச்சா எண்ணெய் வாங்குவதால் அதற்காக இந்தியாவுக்கு அபராதம் விதிப்பதாகவும், இது ஆகஸ்ட் 1ம் தேதி முதல் அமலுக்கு வருவதாகவும் அமெரிக்க அதிபர் டிரம்ப் சமீபத்தில் அறிவித்தார். இதைத் தொடர்ந்து டிரம்பை சமாதானப்படுத்த ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்திய எண்ணெய் நிறுவனங்கள் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாகவே நிறுத்திவிட்டதாக ராய்டர்ஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டது.

இதனை இந்திய அதிகாரிகள் மறுத்தாலும், ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக விளக்கம் அளிக்கவில்லை. இந்நிலையில், நேற்று முன்தினம் அதிபர் டிரம்பிடம் இது குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, "இந்தியா இனி ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கப் போவதில்லை என முடிவு செய்திருக்கும் தகவலை நானும் கேள்விப்பட்டேன். அது உண்மையானதா, இல்லையா என்பது எனக்கு தெரியவில்லை. ஆனால் இது ஒரு நல்ல நடவடிக்கை. என்ன நடக்கிறது என்பதை பார்ப்போம்" என்றார்.


முன்னதாக, இந்தியா, ரஷ்யா பொருளாதாரங்களை செத்துப் போனவை என குறிப்பிட்ட டிரம்ப், அவர்கள் இருவரும் என்ன செய்தாலும் கவலையில்லை என கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

வேலைவாய்ப்பு அறிக்கை அதிகாரியை நீக்கிய டிரம்ப்

அமெரிக்காவில் ஜூலை மாதத்தில் பணியமர்த்தல் மந்தமாகவும், மே மற்றும் ஜூன் மாதங்களில் மிகவும் பலவீனமாகவும் இருந்ததாக அரசின் மாதாந்திர வேலைவாய்ப்பு புள்ளிவிவரங்கள் அமைப்பு தரவுகளை வெளியிட்டது. இதைத் தொடர்ந்து இந்த அமைப்பின் தலைவர் எரிகா மெக்என்டார்பரை பணிநீக்கம் செய்து அதிபர் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். முந்தைய அதிபர் பைடனால் நியமிக்கப்பட்டவரான என்டார்பர் அரசியல் காரணங்களுக்காக இத்தகைய அறிக்கையை வெளியிட்டுள்ளதாக குற்றம்சாட்டி உள்ள டிரம்ப், என்டார்பருக்கு பதிலாக தகுதியான திறமையான ஒருவரை நியமிக்க உத்தரவிட்டுள்ளார. (ஐ)

## உக்ரைன் போரை நிறுத்தாததால் ரஷ்யாவை சுற்றிவளைத்த 2 அமெரிக்க அணு நீர்மூழ்கி கப்பல்கள்

### டிரம்ப் உச்சகட்ட கோபம்



ரஷ்யா மீது உச்சகட்ட கோபத்தில் இருக்கும் அமெரிக்க அதிபர் டிரம்ப், 2 அணு நீர்மூழ்கிக்கப்பல்களை ரஷ்யா நோக்கி நிறுத்த உத்தரவிட்டுள்ளார். உலகில் நடக்கும் எல்லா போரையும் நிறுத்துவதில் அமெரிக்க அதிபர் டிரம்ப் ரொம்பவே ஆர்வமாக இருக்கிறார். இதுவரை, இந்தியா–பாகிஸ்தான் உட்பட பல போர்களை அவரே நிறுத்தி உலகை அமைதியாக்கி வருவதாக கூறுகிறார். இதற்காக தனக்கு நோபல் விருது தரப்பட வேண்டுமென எதிர்பார்க்கிறார்.

உலகில் எல்லா நாடுகளையும் வர்த்தகத்தை காட்டி மிரட்டி வைக்க முடிந்த டிரம்பால், ரஷ்யாவை மட்டும் எதுவும் செய்ய முடியவில்லை. இறுதியாக, உக்ரைன் போரை நிறுத்தாத ரஷ்யாவுக்கு 50 நாள் கெடு விதித்துள்ளார். அதற்குள் போரை நிறுத்தாவிட்டால் வரி விதிப்புகள் கடுமையாக இருக்கும் என எச்சரித்துள்ளார். மற்ற நாடுகளை போல ரஷ்யாவை வர்த்தகத்தை வைத்து அமெரிக்காவால் பணிய வைக்க முடியவில்லை. இதற்கு முக்கிய காரணம் இந்தியா தான். ஏனெனில் ரஷ்யா பொருளாதார ரீதியாக வீழ்ச்சி அடைந்து அமெரிக்காவுக்கு அடிபணியும் என எதிர்பார்த்தது.

ஆனால் அதை கைகூட விடாமல் செய்த நாடுகளில் இந்தியா குறிப்பிடத்தக்கது. நடப்பு 2025ம் நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் (ஏப்ரல் – செப்டம்பர் 2024), இந்தியா சுமார் 47.7 மில்லியன் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய்யை ரூ.4,40,295 கோடி மதிப்பில் இறக்குமதி செய்துள்ளது.

இதுமட்டுமின்றி இந்தியாவின் ராணுவத்திற்கு தேவையான பல ஆயுதங்கள் ரஷ்யாவிடமிருந்தே வாங்கப்படுகிறது. இதனால் ரஷ்யாவும், இந்தியாவும் செத்த பொருளாதாரம் என டிரம்ப் விமர்சித்தார். இதற்கு ரஷ்யப் பாதுகாப்பு கவுன்சிலின் துணைத்தலைவரும் முன்னாள் அதிபருமான டிமிட்ரி மெத்வதேவ் கண்டனம் தெரிவிக்க வார்த்தை மோதல் ஆரம்பித்தது. ரஷ்யா வலிமைமிக்க சக்தி என்பதை டிரம்ப் நினைவில் கொள்ள வேண்டுமென மெத்வதேவ் கூறியதுடன் மிகக் கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்தார். தனது டெலிகிராம் பக்கத்தில், பனிப்போர் காலத்தில் சோவியத் யூனியனால் உருவாக்கப்பட்ட 'டெட் ஹேண்ட்' என்றழைக்கப்படும் தானியங்கி அணு ஆயுத பதிலடி அமைப்பை அவர் நினைவு கூர்ந்தார்.

மெத்வதேவின் இந்த அச்சுறுத்தலைத் தொடர்ந்து, ராணுவ ரீதியிலான பதற்றத்தை உச்சத்திற்கு கொண்டு சென்ற டிரம்ப், தனது சமூக வலைதளப்பக்கத்தில் அதிரடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதில், 'ரஷ்யாவின் முட்டாள்தனமான மற்றும் ஆத்திரமூட்டும் அறிக்கைகளைக் கருத்தில் கொண்டு, 2 அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை நிலைநிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளேன்' என்று குறிப்பிட்டுள்ளார். ரஷ்யப் பாதுகாப்பு கவுன்சிலின் துணைத் தலைவர் – அமெரிக்க அதிபர் இடையிலான வார்த்தைப் போர், தற்போது அமெரிக்கா – ரஷ்யா இடையிலான ராணுவ மோதலாக மாறுமோ என்ற அச்சத்தை உலக நாடுகள் மத்தியில் அதிகரித்துள்ளது.

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்திவிட்டதாக ராய்டர்ஸ் நிறுவனம் செய்தி வெளியிட்ட நிலையில், ஏஎன்ஐ செய்தி நிறுவனத்திற்கு இந்திய அதிகாரிகள் நேற்று அளித்த பேட்டியில், "ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவது நிறுத்தப்படவில்லை. இதற்கான எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. எப்போதும் போல் நேரம், விலை நிலவரம், தேவை ஆகியவற்றின் அடிப்படையில் கச்சா எண்ணெய் வாங்கப்படும். இது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே நீண்டகால ஒப்பந்தம் உள்ளது. அதை ஒரே இரவில் மாற்றிவிட முடியாது. சர்வதேச விதிகளுக்கு உட்பட்டே ரஷ்யாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்குகிறது. இது சட்டப்பூர்வமானது" என்றனர்.

அமெரிக்கா, ரஷ்யா இரண்டுமே உலகின் அதிசக்தி வாய்ந்த ராணுவங்கள் என்றாலும், நீர்மூழ்கிக் கப்பல்களை பொறுத்த வரையில் சமபலத்துடன் உள்ளன. லாஸ் ஏஞ்சல்ஸ், சீவோல்ப் வர்ஜீனியா, ஓஹியோ என 4 வகையான 71 நீர்மூழ்கிக் கப்பல்களை கொண்டுள்ளது. இவற்றில் 53 கப்பல்கள் அணு ஆயுத ஆதரவு கப்பல்கள். நீண்ட தூர இலக்கை தாக்கும் பாலிஸ்டிக் ஏவுகணை வசதி கொண்டவை 14 நீர்மூழ்கிக் கப்பல்கள். ரஷ்யா போரி, டெல்டா–4 ஆகிய 2 வகையான 66 நீர் மூழ்கிக் கப்பல்களை வைத்துள்ளது. 14 கப்பல்கள் அணு ஆயுத கப்பல்களாகும்.(ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிராந்திய அலுவலகத்தின் இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் உட்பட எண்மர் அடங்கிய குழு இன்று செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதிக்கு விஜயம் செய்து அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் அகழ்வுப் பணிகளை அவதானித்தனர்.

இன்று காலை 10 மணியளவில் மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு விஜயம் மேற்கொண்ட மேற்படி குழுவினர், அகழ்வுப் பணிகளின் முன்னேற்றம் குறித்து தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான நிபுணர்கள் குழுவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

## மோட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

அதில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பிரசன்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைக்கப்பட்டுள்ள பிரசன்ன ரணவீர, மஹர நீதிவான் முன்னிலையில் இன்று ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் பிரசன்ன ரணவீரவைக் கைது செய்யுமாறு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆனால், முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர நீதிமன்றில் சரணடையாமல் பிரதேசத்தைவிட்டுத் தப்பிச் சென்று நீண்ட காலமாகத் தலைமறைவாக இருந்தார்.

பின்னர், முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர கடந்த மே மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜி.பி.ஆர். ஸ்கானர் (தரையை ஊடுருவும் ராடர்) மூலம் பரந்துபட்ட ஸ்கான் பரிசோதனை நடவடிக்கையை முன்னெடுக்கப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிகள் கிடைக்கப் பெறவில்லை இந்நிலையில், ஸ்ரீஜெயவர்வத்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ள ஸ்கானர் கருவியை யாழ்ப்பாணம் பல்கலைகழகம் ஊடாகப் பெற்று அதைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த நடவடிக்கையையடுத்து இன்று திங்கட்கிழமை குறித்த ஸ்கானரைப் பயன்படுத்தி பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

நாளை செவ்வாய்க்கிழமையும் மதியம் வரை ஸ்கான் பரிசோதனை இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சான்றுப்பொருட்களான ஆடைகள் மற்றும் பிற பொருட்களைப் பொதுமக்கள் அடையாளம் காட்டும் வகையில் நாளை செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மதியம் 1.30 மணி முதல் மாலை 5 மணி வரையில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சான்றுப்பொருட்களைப் பார்வையிட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாமியாரைக் கழுத்து நெரித்து கொலை செய்த மருமகன் கைது

தனது மாமியாரைக் கழுத்து நெரித்துக் கொலை செய்த மருமகன் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவம் இரத்தினபுரி - டிப்போ சந்தி பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. 74 வயதுடைய பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, இரத்தினபுரி - டிப்போ சந்தி பகுதியில் உள்ள வீடொன்றில் சடலம் ஒன்று கிடப்பதாக இரத்தினபுரி பொலிஸாருக்கு நேற்று அதிகாலை தகவல் கிடைத்தது.

இதையடுத்துச் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பொலிஸாரின் விசாரணைகளில், மருமகனுக்கும் மாமியாருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான 29 வயதுடைய மருமகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியீடு செய்வீர்களா?' எனக் கேட்ட போது,

“யாழ்ப்பாணத்தில் 1996 - 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு 2003ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணைத்தளத்தில் பதிவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்.” - என்று அவர்கள் பதிலளித்தனர்.

# வடக்கு மாகாண சபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக எம். ஏ. சுமந்திரன்!

வடக்கு மாகாண சபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட விரும்புகிறேன் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். அரசியல் குழு கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த விடயம் தொடர்பில் நான் முறையாக கட்சிக்கு அறிவிக்கவுள்ளேன். எனினும் எனது வேட்புமனுவை அங்கீகரிப்பதோ அல்லது நிராகரிப்பதோ கட்சியின் முடிவைப் பொறுத்தது. முதலமைச்சர் பதவிக்கு என்னை விட பொருத்தமான ஒரு வேட்பாளரை கட்சி அடையாளம் கண்டால், கட்சியின் முடிவுக்கு நான் முழுமையாகக் கட்டுப்படுவேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# யோஷித, டெய்சி பாட்டிக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு!

கொழும்பு, ஓக. 04

பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணையை ஒத்திவைத்து கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை காலை உத்தரவிட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி முதல் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதியில், சட்டவிரோதமாக சம்பாதித்ததாகக் கூறப்படும் 59 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை 3 வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்துள்ளதாக யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு இன்று அழைக்கப்பட்ட போது யோஷித ராஜபக்ஷவும் டெய்சி பாட்டியும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

ஆனால், இந்த வழக்கை விசாரணை செய்யும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன விடுமுறையில் உள்ளதால் வழக்கு மீதான விசாரணையை ஒத்திவைத்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி இந்த வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தாய் கொலை! மகள் கைது!!

குருநாகல், ஓக. 04

தனது தாயைக் கழுத்து நெரித்துக் கொடூரமாகக் கொலை செய்த மகள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல், வாரியபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்தெனிய பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. ரந்தெனிய பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய தாயே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று வாரியபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தாயின் 32 வயதுடைய மகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரான மகள் மனநல நோயால் பாதிக்கப்பட்டவர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாரியபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன

# விசேட சுற்றிவளைப்பின்போது 4 ஆயிரத்து 479 பேர் சிக்கினர்!

கொழும்பு, ஓக. 04

இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4 ஆயிரத்து 479 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 23 பேரும், சந்தேகத்தின் பேரில் 748 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 210 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 161 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 110 சாரதிகளும், கவனக் குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 25 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 202 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# உள்நாட்டுத் துப்பாக்கியுடன் வயோதிபர் ஒருவர் மாட்டினார்

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் வயோதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை, அக்போபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சீனிபுரம் பகுதியில் மேற்படி வயோதிபர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்போபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அக்போபுரம் பகுதியை சேர்ந்த 64 வயதுடைய வயோதிபர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண்களுக்கு தொழில்நுட்பம்...

அந்தத் துறையில் பங்களித்த ஆண் விஞ்ஞானிகளையே அதிகம் அழைப்பார்கள். ஆதாரமின்றி ஒரு புலம்பலாக இதை நான் சொல்லவில்லை. உதாரணமாக, 2011ஆம் ஆண்டில் நடந்த செயற்கை அறிவு மாநாட்டில், முக்கியப் பேச்சாளர்களில் ஏழு விழுக்காடு மட்டுமே பெண்கள். 2016ஆம் ஆண்டு நடந்த ஒரு நுண்ணுயிரியல் மாநாட்டில் மொத்தம் 27 கருத்துரையாளர்கள் பேசினார்கள். இதில் 25 பேர் ஆண்கள். இப்படிப் பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். இவ்வாறு ஆண்கள் மிக அதிகமாக இருந்தாலோ ஆண்கள் மட்டுமே பேச்சாளர்களாக இருந்தாலோ அவற்றை ஆயகெநசநஉந என்று அழைக்கிறார்கள்.

ஆண்கள் மட்டுமே கொண்ட மாநாட்டு விவாதக்குழுக்கள் உண்டு. இவற்றை ஆயநெட (Men only Panel – Manel) என்று அழைக்கிறார்கள். சில உதாரணங்களைப் பார்க்கலாம். 2017 முதல் 2019 வரையிலான காலகட்டத்தில் அமெரிக்காவின் சிறுநீரகவியல் துறையில் பல மாநாடுகள் நடந்தன. இவற்றில் மொத்தம் 168 விவாதக்குழு நிகழ்வுகள் நடந்தன. இதில் 59மூ விவாதக்குழுக்கள் ஆண்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டவை. கரோனா கொள்ளைநோய் காலகட்டத்தில் நடந்த சில இணைய விவாதக்குழுக்களும் மேனல்களாகவே இருந்தன என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். 2017, 2018 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அமெரிக்கா உள்ளிட்ட ஐந்து மேலைநாடுகளில் நடந்த மொத்த விவாதக்குழு நிகழ்வுகளில் 36மூ மேனல்கள் என்று ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. ஆக்ஸ்போர்டு அகராதியில் 2014ஆம் ஆண்டில் இந்தச் சொல் அதிகாரபூர்வமாகச் சேர்க்கப்பட்டது.

மேனல் மற்றும் மேன்ஃபரன்ஸ் போன்றவற்றால், பெண் விஞ்ஞானிகளுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய முக்கியத்துவமும் அங்கீகாரமும் கிடைக்காமல் போய்விடுகிறது. அவர்களது சாதனைகள் வெளிச்சத்துக்கு வருவதில்லை. இதனால் துறைசார் முன்னோடிகள் என்கிற இடத்திலும், துறையின் முக்கியப் பங்களிப்பைத் தந்தவர்கள் என்கிற பட்டியலிலும் பெண்களின் பெயர்கள் அவ்வளவாக இடம்பெறுவதில்லை. காலப்போக்கில் பெண்களின் பங்களிப்பு மறைந்தே போகிறது.

சூழ்நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறிவருகிறது என்பதை மறுப்பதற்கில்லை. மேனல்கள் இருந்தால் அந்த மாநாட்டில் பங்குகொள்ள மாட்டோம் என முக்கிய விஞ்ஞானிகள் அறிவிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். மூன்றாமுலக நாடுகளுக்கும் பெண்களுக்கும் முக்கியத்துவம் தரக்கூடிய நிதி அமைப்புகள் கடந்த சில ஆண்டுகளில் தொடங்கப்பட்டிருக்கின்றன. 2011ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது ஸ்டெம் மாநாடுகளில் பெண் பேச்சாளர்களின் எண்ணிக்கை மெதுவாக உயர்ந்து வருவதாக நேச்சர் ஆய்விதழ் தெரிவிக்கிறது. எல்லா இடங்களிலும் மாற்றம் வரவில்லை என்றாலும் “ஏன் நிலைமை இப்படி இருக்கிறது?” என்பதுபோன்ற கேள்விகளாவது வரத் தொடங்கியிருக்கின்றன. ஆனால் அதை வைத்து மட்டுமே திருப்தியடைந்துவிட முடியாது. சமூகம் அனுமதித்ததோ இல்லையோ, அறிவியலுக்குள் ஆண்களும் பெண்களும் ஒன்றாகத்தான் நுழைந்தார்கள். அப்படியிருக்க, 2024ஆம் ஆண்டிலும் இப்படிப்பட்ட பாரபட்சங்கள் ஏன் தொடர்கின்றன என்பதைக் கவனிக்கத்தான் வேண்டும்.

ஸ்டெம் துறையில் மட்டுமல்லாமல் எங்கு சென்றாலும் பெண்களின் வாழ்வில் குறுக்கே வந்து நிற்பது உடை பற்றிய பிரச்சினைதான். பெண் விஞ்ஞானிகளும் உடைசார்ந்த சிக்கல்களைச் சந்தித்திருக்கிறார்கள், தெரியுமா?


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!